2022 ஏப்ரல் 21]

145—

காகிதத் தொழிற்சாலை

***7403—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் காகித உற்பத்திற்குத் தேவையான தைல மரம், சவுக்கு மரம் போன்றவை* TNPL*–ல் பதிவு செய்யப்பட்டு, 20,000 ஏக்கர் நிலப் பரப்புக்குமேல் பயிரிடப்படுகின்றன. மேலும், பதிவு செய்யாமல் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யப்படுகின்றன. இவற்றில், ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அளவிலான மரங்கள்* TNPL*–க்கு வெட்டி அனுப்பப்படுகின்றன. இதில், 70,000 மெட்ரிக் டன் தைல மரங்களும், 30,000 மெட்ரிக் டன் சவுக்கு மரங்களும் வெட்டி அனுப்பப்படுகின்றன. மேலும், அருகிலே கொள்ளிடம் ஆறும் ஓடுகின்ற காரணத்தினால், அதற்குத் தேவையான தண்ணீரையும் கொள்ளிடம் ஆற்றிலிருந்து எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறது. எனவே, ஜெயங்கொண்டம் பகுதியில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகித ஆலை இலாபகரமாக இயங்க வேண்டுமென்று சொன்னால், அதனுடைய உற்பத்தித் திறன் என்பது, ஏறத்தாழ 500 மெட்ரிக் டன் அளவிற்கு இருக்க வேண்டும். 500 மெட்ரிக் டன் அளவிற்கு அதை இலாபகரமாக இயக்க வேண்டுமென்று சொன்னால், அங்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு கரும்புச் சக்கை தேவைப்படுகிறது. அதேபோல தைல மரங்கள் மற்றும் கூழ் மரங்கள் போன்றவை 2 இலட்சம் டன் தேவைப்படுகிறது. இஃதன்னியிலே, அதுவொரு water intensive industry என்கின்ற காரணத்தினால், அதற்கு நீராதாரம் மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது. தண்ணீரினுடைய தேவை ஏறத்தாழ 30 ஆயிரம் cubic metre ஆக இருக்குமென்று கணக்கிடப்படுகிறது. மேலும், ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ, 2,700 கோடி ரூபாய் உடனடி முதலீடாக நமக்குத் தேவைப்படுகிறது. ஏற்கெனவே, TNPL–ல் ஒரு expansion project–க்கான பணி இப்போது மொண்டிப்பட்டியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சாத்தியக்கூறுகளையெல்லாம் நாம் ஆராய்ந்து கணக்கில்கொள்கின்றபோது, இப்போது அதற்கான வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் சிறந்த சூழ்நிலைகள் உருவாகுமென்று சொன்னால், நிச்சயமாக அப்போது அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில், குறிப்பாக, ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் படித்த இளைஞர்கள் சாதிய அமைப்புகளில் சேர்ந்து தங்களுடைய கனவுகளை, இலட்சியங்களை, தங்களது வாழ்க்கையை வீணடித்து வருகின்றார்கள். எனவே, எவ்வித அரசு தொழிற்சாலையும் இல்லாத என்னுடைய ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் காகிதத் தொழிற்சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டத்திற்கு அருகிலுள்ள கடலூர், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் சம்பங்கி, மல்லிகை போன்ற பூக்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, அங்கு அரசு அல்லது தனியார் சார்பில், வாசனைத் திரவிய உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களை வழிநடத்தி, வழிகாட்டி, அவர்களுக்குரிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமாகத்தான், சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல இடத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' என்கின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டை உருவாக்குவதற்கான ஓர் அற்புதமான திட்டத்தை இப்போது செயலாக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, வாசனைத் திரவியங்கள் அல்லது பூக்கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடங்களில் scent தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய முதலீட்டோடு உரிய தொழில்முனைவோர் வருகின்றபட்சத்தில், தமிழ்நாடு அரசினுடைய தொழில் துறை அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவர்கள் அந்தத் தொழிலைத் துவங்குவதற்கான வசதிகளை நாங்கள் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

சாலையை மேம்படுத்துதல்

***2922—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—